විශ්‍රාම වැටුප් දෙපාර්තමේන්තුව
ஓய்வூதிய திணைக்களம்
DEPARTMENT OF PENSIONS
මාලිගාවත්ත ලේකම් කාර්යාලය, මාලිගාවත්ත, කොළඹ 10 | மாளிகாவத்தை செயலகம், மாளிகாவத்தை, கொழும்பு 10 | Maligawatte Secretariat, Maligawatte, Colombo 10

අංකය
இல.
No. .....

දිනය
திகதி
Date 2009.02.20

ஓய்வூதியச் சுற்றறிக்கை 07 /2009

மாவட்டச் செயலாளர்கள்,
பிரதேசச் செயலாளர்கள்,
மற்றும், முப்படை தலைவர்கட்கு,

வாழ்க்கைச் செலவு கொடுப்பனவு ஒரு நபருக்கு பல முறைகளில் கொடுக்கப்படுவதை மீளாய்வு செய்தல்

மேற்படி விடயம் தொடர்பாக வெளியிடப்பட்ட 06.02.2008 ஆந் திகதிய பொது நிர்வாக சுற்றரிக்கை இல 6/ 2008 மற்றும் 01.07.2008 ஆந் திகதிய ஓய்வூதிய திணைக்களச் சுற்றறிக்கை இல 4/ 2008 இற்கு தங்களது தயவான கவனம் ஈர்க்கப்படுகின்றது.

எவரேனுமொரு நபர் அரச ஊழியர் ஒருவர் பெறும் வாழ்க்கைச் செலவு கொடுப்பனவுக்கும் அதிகமான தொகையை வாழ்க்கைச் செலவு படியாக பெறுவாரெனில், அவ்வாறு அதிகமாக கொடுக்கப்படும் வாழ்க்கைச் செலவு படி கழிக்கப்பட வேண்டுமெனவும் கழிப்பனவு எப்போதும் சம்பளம் வழங்கும் அரச நிறுவனத்தினூடாக செய்யப்பட வேண்டுமெனவும் ஓய்வூதியத் திணைக்களச் சுற்றறிக்கை இல 4/ 2008 மூலம் என்னால் அறிவுறுத்தல்கள் வழங்கப்பட்டுள்ளன.

எவ்வாறிருப்பினும், சம்பளம் வழங்கும் அரச நிறுவனத்தினூடாக அவ்வாறு அதிகமாக கொடுக்கப்பட்ட வாழ்க்கைச் செலவு படியை கழிப்பனவு செய்யும் போது பல்வேறுபட்ட கஷ்டங்களுக்கு முகம் கொடுக்க நேரிட்டதென எனக்கு அறிக்கை செய்யப்பட்டுள்ளதுடன், கழிப்பனவை சம்பளத்திலிருந்து அல்லாது ஓய்வூதியத்திலிருந்து செய்யும் படியும் பல்வேறு கோரிக்கைகள் கிடைக்கப் பெற்றுள்ளன.

அதன்படி இது தொடர்பான விடயங்களை கற்று ஆராய்ந்ததைத் தொடர்ந்து என்னால் கீழ் குறிப்பிட்டுள்ள அறிவுறுத்தல்கள் வெளியிடப்படுகின்றன என்பதை தயவுடன் தெரிவித்துக்கொள்கிறேன்.

1. ஓய்வுதியத் திணைக்களச் சுற்றறிக்கை 4/ 2008 ஐ இத்தால் திருத்தஞ் செய்கிறேன்.

2. ஓய்வூதியர் வழங்கும் அறிக்கைகளின் படி எவரேனுமொரு நபர் அரச ஊழியரொருவர் பெறும் வாழ்க்கைச் செலவு படியை விட அதிகமான தொகையை வாழ்க்கைச் செலவு படியாக பெறுவாரெனில் அதிகமாக கொடுக்கப்படும் மேலதிக வாழ்க்கைச் செலவு படியை ஓய்வுதியத்திலிருந்து கழிப்பதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும்.

கே.ஏ.திலகரத்ன,
ஓய்வூதியப் பணிப்பாளர் நாயகம்.

பிரதிகள்:
1. சகல அமைச்சு செயலாளர்.
2. மாகாண சபை பிரதம செயலாளர்கள்.
3. திணைக்களத் தலைவர்கள்.
4. உள்ளூராட்சி நிறுவன்த் தலைவர்கள்.

	Telephone	Fax		Telephone	Fax		Telephone
Director General	2431647	2342078	W&OP	2332346	2432214	Policy	2329580
Director	2432008	2342078	PSPF	2324375	2332347	Forces	2320439
Director (F)	2434974	2391403	L.G.U.	2342525	2342525	Computation	2434414
Internal Auditor	2329634	2329634	Registration	2329178	-	Payments	2431612

E-mail: pensions@sltnet.lk
Web site: www.pensions.gov.lk